சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்

# தமிழ்நாடு அரசு
# இந்து சமய அறநிலையத்துறை
# உதவி ஆணையர் அலுவலகம்

**அருள்மிகு வீரராகவப் பெருமாள் திருக்கோயில் வளாகம், திருப்பூர் –641604.**

# வேலை வாய்ப்பு விளம்பர அறிவிப்பு

**கட்டு எண்.1/2010/அ1**

திருப்பூர் இந்து சமய அறநிலையத்துறை, உதவி ஆணையர் அலுவலகத்தில் காலியாக உள்ள கீழ்க்கண்ட பணியிடங்களை நிரப்பிட தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. கீழே கொடுக்கப்பட்டுள்ள இட ஒதுக்கீடு கல்வித்தகுதி மற்றும் வயது வரம்பிற்குட்பட்ட இந்து சமயத்தைச் சார்ந்தவர்கள் மட்டும் விண்ணப்பிக்க வேண்டும். தகுதியுள்ள விண்ணப்பதாரருக்கு நேர்முகத்தேர்வு நடைபெறும் பணி நியமனம் முற்றிலும் தற்காலிகமானது.

| | | |
|---|---|---|
| பணியின் பெயர் | அலுவலக உதவியாளர் | |
| பணியிடம் | உதவி ஆணையர் அலுவலகம் , திருப்பூர் | |
| சம்பள விகிதம் | நிலை –1 ரூ. 15700 – ரூ.50000 | |
| குறைந்தபட்ச கல்வித்தகுதி | 8–ம் வகுப்பு தேர்ச்சி | காலியிடங்கள் |
| இட ஒதுக்கீடு ( காலியிடங்கள் – 6 ) | 1) பொதுப்போட்டி – பொது – முன்னுரிமை பெற்றவர்* (GT-GL-Priority*) | 1 |
| | 2) ஆதிதிராவிடர் – அருந்ததியினர் – பெண்கள் – ஆதரவற்ற விதவை (SCAW-DW) | 1 |
| | 3) மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு – பொது – முன்னுரிமை பெற்றவர் * (MBC-GL-Priority*) | 1 |
| | 4) பிற்படுத்தப்பட்ட வகுப்பு – பொது – முன்னுரிமை பெற்றவர் * (BC-GL-Priority*) | 1 |
| | 5) பொதுப்போட்டி – பெண்கள் – ஆதரவற்ற விதவை * (GT-W-DW) | 1 |
| | 6) ஆதிதிராவிடர் – பொது முன்னுரிமை பெற்றவர் * ( SC-GL -Priority* ) | 1 |
| | மொத்த பணியிடங்கள் | 6 |

| 01.01.2022–ல் வயது வரம்பு | SC/ST | GT | MBC/DNC | BC |
|---|---|---|---|---|
| அதிகபட்ச வயது | 37 | 32 | 34 | 34 |
| குறைந்தபட்ச வயது | 18 | 18 | 18 | 18 |
| அரசு விதிகளின்படி வயது வரம்பு தளர்வு அனுமதிக்கப்படும். | | | | |

**முன்னுரிமை சான்றுகள் (Priority Certificates)**

1. ஆதரவற்ற விதவை சான்று 2. கலப்பு திருமண சான்று 3. முன்னாள் படைவீரர் சான்று 4. முன்னாள் படைவீரர் வாரிசு சான்று 5. நில ஆர்ஜிதம் சான்று 6. தாய்தந்தை அற்றவர் சான்று 7. உடல் ஊனமுற்றோர் சான்று

மேற்கூரிய தகுதியுள்ள இந்து சமயத்தைச் சார்ந்தவர்கள் 25–04–2022 மாலை 5.30 மணிக்குள் கீழ்க்காணும் ஆவணங்கள் சான்றின் நகல்களுடன் விண்ணப்பத்தினை புகைப்படத்துடன் சுயவிலாசமிட்ட ரூ.25/–க்கான தபால் தலை ஒட்டிய கவர் ஒன்றுடன் கீழ்கண்ட முகவரிக்கு விண்ணப்பிக்க வேண்டும். இருப்பிட முகவரி, அஞ்சல் குறியீட்டு எண், கைபேசி எண் ஆகியவற்றை தெளிவாகவும், அலுவலக உதவியாளர் பணியிடம் என்று குறிப்பிட்டும் அனுப்பப்பட வேண்டும். குறிப்பிட்ட தேதிக்குள் வரப்பெறாத விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

**அனுப்ப வேண்டிய விபரங்கள்** 1. விண்ணப்பதாரர் பெயர் மற்றும் முகவரி (அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்), 2. எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றதற்கான கல்வி சான்று நகல், 3. பள்ளி மாற்று சான்று நகல், 4. சாதி சான்று நகல் (வட்டாட்சியரால் வழங்கப்பட்டது), 5. வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்த பதிவு எண், பதிவு சான்று நகல், 6. குடும்ப அடையாள அட்டை நகல், 7. முன்னுரிமைக்கான சான்று நகல் (Priority Certificates), 8. இதர தகுதிகள் ஏதுமிருப்பின் அதன் விபரம் மற்றும் நகல், 9. சுயவிலாசமிட்ட தபால் தலையுடன் கூடிய உறை 1.

**விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி :**
**உதவி ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை,**
அருள்மிகு வீரராகவப் பெருமாள் திருக்கோயில் வளாகம், திருப்பூர் –641604.

ஒம். **இரா.செல்வராஜ்,** உதவி ஆணையர்
இந்து சமய அறநிலையத்துறை, திருப்பூர்

வெ.ஆ.எண்.105 / 2022 / செ.ம.தொ.அ / திருப்பூர் / நாள் : 23–03–2022